

புதுக்கோட்டை மாவட்ட கழக அலுவலகத்தில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் திருஉருவச் சிலைக்கு, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி முன்னிலையில், புதிதாக அமைக்கப்பட்ட கழக மாற்றுத்திறனாளிகள் அணியின் மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்ட ரெ. தங்கம் மாலை அணிவித்து மரியாதை செய்தார். மாவட்டக் கழக நிர்வாகிகளும், ஒன்றிய கழக நிர்வாகிகளும், நகரக் கழக நிர்வாகிகளும், மாமன்ற உறுப்பினர்களும் மற்றும் ஏராளமான மாற்றுத்திறனாளிகள் உடன் பங்கேற்றனர்.



ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியை ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ஆலந்தூர் தெற்கு பகுதி, 163–வது வட்டம், மண்ணடியம்மன் கோயில் தெருவில் குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வீடு வீடாகச் சென்று படிவம் மற்றும் மக்களுடன் ஸ்டாலின் செயலி வழியாக உறுப்பினர்களை சேர்த்தார். அருகில் மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், வட்டச் செயலாளர்கள் கே.ஆர்.ஜெகதீஸ்வரன், ஏ.வேலவன், மாமன்ற உறுப்பினர் பூங்கொடி ஜெகதீஸ்வரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தமிழ் இலக்கியத்தின் மாண்பை உணர வைப்பதற்கு

# முதலமைச்சரால் கொண்டுவரப்பட்ட அருமையான திட்டம்!

## இளையோர் இலக்கிய பயிற்சி பாசறையை தொடங்கி வைத்து அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேச்சு!



சென்னை, ஜுலை 11-

“தமிழ் இலக்கியத்தின் மாண்பை உணர வைப்பதற்கு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அருமையான திட்டம் இது” என்று அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இளையோர் இலக்கிய பயிற்சி பாசறையை தொடங்கி வைத்து பேசும் போது கூறினார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (10.07.2025) வேப்பேரி, தமிழ்நாடு அரசு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இளையோர் இலக்கிய பயிற்சி பாசறையை தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு:

இன்றைக்கு நம்முடைய முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்களுடைய அரசியல் வாரிசாக தமிழ்நாடு அரசின் முதலமைச்சராக பொறுப்பேற்று இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் தமிழுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் தந்து கொண்டிருக்கிறார் கலைஞர் அய்யா அவர்களுடைய வழியில் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் இருக்க வேண்டும் என்பதை கருதி, தமிழ் வளர்ச்சியை இன்றைய நிலைக்கு முன்னெடுப்பாக எடுத்து அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திக் வருகின்றார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

நம்முடைய தாய் மொழியும் எந்த விதத்திலும் பின்னடைவு அடையக்கூடாது என்பதை உறுதி எடுத்துக் கொண்டு, அந்த சூழ்நிலையை பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். இன்றைக்கு பேசிய அனைவரும் அதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். உங்களுக்கும் அதில் சந்தேகம் இல்லை என்பதை நான் அறிவேன்.

ஒரு சிலர் சரித்திரத்தை உருவாக்குகிறார்கள் - பலர் சரித்திரத்தில் இடம் பெறுகிறார்கள் - மிகப் பலரோ இவை எதுவுமற்ற தரித்திரங்களாகவே மறைந்து போகிறார்கள் என்பார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரின் வாய் மொழிக்கேற்ப சரித்திரமாகுபவர்களும், சரித்திரத்தை உருவாக்குபவர்களும், சரித்திரத்தில் இடம்பெறுகின்றவர்களும், ஒளிபடைத்த கண்களோடு இந்தப் பயிற்சிப் பாசறையில் அமர்ந்திருக்கும் மாணவச் செல்வங்களை காண முடிகிறது. நாங்கள் வரலாற்றில் சுவடுகள் பதிக்காமல் வழுவ மாட்டோம் என்ற உங்களின் உள்ள உறுதியை உணருகிறோம் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**38 மாவட்டங்களில் பாசறை!**

தொன்மையும், தொடர்ச்சியும் உடைய உன்னத மொழி உயர்தனி செம்மொழி நம் அன்னை தமிழ்மொழியின் மீதான ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு, 38 மாவட்டங்களிலும் நடைபெறும் “இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை” இந்த ஆண்டுக்கான நிகழ்வாக துவங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன் -துவக்கி வைப்பதிலும் மகிழ்ச்சி அடைகிறேன்.

உயர் புகழ் கொண்ட தமிழ் அறிஞர்களை அழைத்து வந்து நல்ல நல்ல தலைப்புகளில் தமிழ் இலக்கிய சொற்பொழிவுகளை வழங்கி, இலக்கியத்தின் மாண்பை உங்களுக்கு உணர வைப்பதற்கு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அருமையான திட்டம் தான் இந்தத் திட்டம். இந்த திட்டத்தை தமிழ் வளர்ச்சித் துறை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறது.

2023-24-ஆம் ஆண்டிற்கான பயிற்சிப் பாசறை சென்னை, எத்திராஜ் கல்லூரியிலும், 2024-25-ஆம் ஆண்டிற்கான பயிற்சிப் பாசறை சென்னை, ராணி மேரி கல்லூரியிலும் நடைபெற்றது. அது மட்டுமல்லாமல், 38 மாவட்டங்களிலும் இந்த பயிற்சி பாசறை நடைபெற்று இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**எதிர்காலம் சிறக்க பாசறை அடித்தளமாக அமையும்!**

ஆண்டுதோறும் நடைபெறும் பயிற்சி பாசறை முழுமையான பயன் மாணவர்களை சென்றடைய வேண்டும் என்பதே அரசின் எண்ணம். அதை ஈடேற்றும் வகையில்தான் இந்தப் பாசறை நிகழ்வு அமைந்திருப்பது பாராட்டிற்குரியது. முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்கள் கூறுவார் - நல்ல காலம், நாம் காலில் வந்து விழாது, அதை நோக்கி நாம்தான் கால் கடுக்க நடக்க வேண்டும் என்று சொன்னார் - அவ்வகையில் உங்களுடைய விடா முயற்சியால் உங்கள் வருங்காலம் சிறக்க இந்த பாசறை அடித்தளமாக அமையும் என்று நான் உறுதியாக கருதுகிறேன். உங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பு அளப்பரியது. அதை அருமை உணர்ந்து பயன் பெறுங்கள்; வாழ்க்கையில் பாராட்டை பெறுவீர்கள். தமிழால் நாங்கள் உயர்ந்தோம்; தமிழராய் தலை நிமிர்ந்தோம் என்ற செம்மார்ந்த வாழ்வினை வாழ மாணவக் கண்மணிகளே என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல, அறிவாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை என்கின்ற சொல்லில், அறிவும், ஆற்றலும் சேர்ந்து உழைத்தால், இதை வெற்றி நிச்சயம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அந்த வெற்றி எப்போதும் உங்களை விட்டு நீங்காது நிலை பெறவேண்டும் என்று உங்களை வாழ்த்தி, உங்கள் அனைவருக்கும் வணக்கத்தை மீண்டுமொரு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை செயலாளர் வே ராஜாராம், தமிழ் வளர்ச்சி துறை இயக்குநர் முனைவர் ந. அருள் கால்நடை மருத்துவ கல்லூரி முதல்வர் முனைவர் சி. சௌந்தரராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயத்தில்

# ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள்!

## பணியினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜுலை 11-

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயத்தில் சுற்றுலாத் துறையின் சார்பில் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணியினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் 2024-25 ஆம் ஆண்டு வரவு செலவு கூட்டத்தொடரில் அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயப் பகுதிகளில் ரூ.1.38 மதிப்பீட்டில் கழிவறைகள், பேவர் பிளாக் சாலை மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம், தேவலாயப் பகுதி நுழைவு வாயில், R.O.Plant, குழந்தைகளுக்கான விளையாட்டு வசதிகள், தெரு விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயப் பகுதியில் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணியினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் இன்றையதினம் துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் தொழிற்சங்கங்கள் இன்றையதினம் வேலைநிறுத்தத்தில் ஈடுப்பட்டு வருகிறார்கள் ஆனால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் பேருந்துகள் அனைத்து இடங்களிலும் வழக்கம் போல் இயக்கப்பட்டு பொதுமக்கள் எவ்வித சிரமமுமின்றி பயணம் மேற்கொண்டு வருகின்றனர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உதவி சுற்றுலா அலுவலர் வரதராஜன், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலய பாதிரியார் தங்கசாமி, மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய கழக பொறுப்பாளர் இரா.கென்னடி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர்.முருகேசன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வ.பிரபாகரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இலக்கியதாசன், அரியலூர் சட்டமன்ற தகவல்தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சுபாஷிணி, மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கண்டோன்மெண்ட் நசரத்புரத்தில் இன்று நடைபெறுகிறது

# ‘திராவிட மாடல்’ அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் – தமிழ் சாதிக் – கோகுல் சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜுலை 11-

கண்டோன்மெண்ட் நகர இளைஞர் அணி சார்பில் நசரத்புரத்தில் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று மாலை நடைபெறுகிறது. தமிழ்சாதிக் - கோகுல் மற்றும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கண்டோன்மெண்ட் நகர இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்தநாள் வழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனை விளக்கும் தெருமுனை கூட்டம் கண்டோன்மெண்ட் நசரத்புரம் போலிஸ் பூத் அருகில் (கரையார் கோவில் தெருவில்) இன்று மாலை 6.00 மணியளவில் நகர இளைஞர் அணி அமைப்பாளர் சுனில் பால்ராஜ் தலைமையில் நடைபெறுகிறது.

கண்டோன்மெண்ட் நகர மாணவர் அணி அமைப்பாளர் எம். பி.மகேஷ் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

சி.செந்தில்குமார், வி. தினேஷ், ஏ.ரவிச்சந்திரன், சி.பி.எம்.வேல்முருகன், வி.வின்கேஷ், ஆர்.அஜித்குமார், ஆர்.யுவராஜ், எஸ். தாமஸ்ராஜன், எஸ்.ஜெய்கிருஷ்ணன், எம்.மொய்தின், என்.ஜி.ஆர்.பரத் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - பேச்சாளர்கள் தமிழ்சாதிக் - கோகுல் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் மீ.அ. வைதியலிங்கம், கண்டோன்மெண்ட் நகரச் செயலாளர் டி.பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் பி.தினகரன், கே.மாறன், பி.ஸ்டீபன் பால், வி.வேலு, எம்.ஜெய்கணேஷ், என்.வி.விஜயசங்கர், கே.சங்கர் மற்றும் கழகத்தினர் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

முடிவில் வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.செல்வகுமார் - துணை அமைப்பாளர் ஜெகதிஷ் ராஜா ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

### ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்களில் மட்டுமே

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம்!

## இன்று முதல் சென்னையில் படிவம் மற்றும் கையேடு விநியோகம்!

சென்னை, ஜுலை 11-

பெருநகர சென்னை மாநகராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் 22.07.2025 அன்று 6 வார்டுகளில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, தன்னார்வலர்கள் மூலமாக இந்த 6 வார்டுகளிலும் வீடு வீடாகச் சென்று 13 அரசுத் துறைகளின் வாயிலாக 43 சேவைகள் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணி இன்று (11.07.2025) தொடங்கி நடைபெறவுள்ளது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் மட்டுமே வழங்கப்படும்.

முதலமைச்சர் அவர்களின் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமானது, பெருநகர சென்னை மாநகராட்சியில் 15.7.2025, 16.07.2025, 17.07.2025 மற்றும் 18.07.2025 ஆகிய நாட்களில் நடைபெற உள்ள வார்டுகளில் தன்னார்வலர்கள் மூலம் 13 அரசுத் துறைகளின் வாயிலாக 43 சேவைகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் கையேட்டினை மக்களுக்கு வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து, 22.07.2025 அன்று “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமானது, திருவொற்றியூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-2, இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-54, அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-95, கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-138, அடையாறு மண்டலத்திற்குட்பட்ட வார்டு-169, பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட வார்டு-181 ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, தன்னார்வலர்கள் மூலம் 13 அரசுத் துறைகளின் வாயிலாக 43 சேவைகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் கையேட்டினை மக்களுக்கு வழங்கும் பணியானது இன்று (11.07.2025) முதல் தொடங்கி நடைபெறும்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் மட்டுமே வழங்கப்படும்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை கூட்டம் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் டி.கே.வினோத் ஏற்பாட்டில் நடைபெற்றது. பகுதி செயலாளர் ஜி.துக்காராம், 3வது மண்டல குழு தலைவர் நந்தகோபால் ஆகியோர் வரவேற்றார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சி.எஸ்.எஸ்.டி. சீனிவாசன் ஆகியோர் முன்னிலையிலும் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., தலைமை கழக பேச்சாளர்கள் முரசொலி மூர்த்தி, இளம் பேச்சாளர் எஸ்.மாறன் ஆகியோர் சாதனையை விளக்கி உரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்டம், ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதி 42(அ) வட்டத்தில் சட்டத்துறை மாநில துணைச் செயலாளர் வழக்கறிஞர் என்.மருதுகணேஷ் கழகத் தலைவரின் ‘ஓரணியில் தமிழ்நாடு’ வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி ஒன்றிய அரசு பல்வேறு வகைகளில் தமிழ்நாட்டை வஞ்சிப்பதை வாக்காளர்களிடம் எடுத்துக் கூறி தி.மு.க.வில் உறுப்பினராக சேர்க்கும் பணியை மேற்கொண்டார். உடன் வட்டச் செயலாளர் ச.தமிழ்ச்செல்வன், பாக முகவர் எஸ்.ராஜேஷ்,பாக வலைதள முகவர் ஏ.பாண்டியராஜன், மகளிர் அணி ஆர்.கிரிஜா , எஸ்.மதிவதினி, இளைஞர் அணி சேர்ந்த எம்.தனுஷ், குணசேகர், ஆகியோர் இப்பணியில் ஈடுபட்டனர்.